**தலைப்பு 101 – புத்தசாசன மற்றும் வடமேற்கு அபிவிருத்தி அமைச்சு**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

புத்தசாசன மற்றும் வடமேற்கு அபிவிருத்தி அமைச்சின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் புத்தசாசன மற்றும் வடமேற்கு அபிவிருத்தி அமைச்சின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2020 யூன் 29 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்திற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2021 சனவரி 11 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

2019 திசெம்பர் 03 ஆந் திகதிய 271/2019 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட அந்த நிதிக்கூற்றுக்கள் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான புத்தசாசன மற்றும் வடமேற்கு அபிவிருத்தி அமைச்சின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய

வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் அமைச்சால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

----------------------------------------------------------------------------------------------------------------------------

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு அமைச்சின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவு மற்றும் 38 ஆம் பிரிவு என்பவற்றின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்களுடன் நேரொத்ததாக உள்ளதென்றும்,

(ஆ) முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் வழங்கப்பட்ட பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்டிருந்தது.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

பின்வரும் சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| அவதானிப்புக்கள் | | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| **சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு** | **இணங்காமைகள்** | | |
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 396(ஈ) | மீளாய்வாண்டில் திசெம்பர் 31 இல் உள்ளவாறு விநியோகிக்கப்பட்ட 07 மாதங்களுக்கும் 17 மாதங்களுக்கும் இடையிலான காலத்தை விஞ்சிய ரூபா 210,053 கூட்டுத்தொகையான 11 | நிதிப் பிரமாணம் 396(ஈ) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | காசோலைகள் தொடர்பாக நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | 2016 திசெம்பர் 29 ஆம் திகதிய 30/2016 ஆம் இலக்க அரச நிர்வாக சுற்றறிக்கை. | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அமைச்சுக்கு சொந்தமான 16 குளாம் வாகனங்கள் காணப்பட்டதுடன் அந்த வாகனங்களில் எரிபொருள் எரிவு தொடர்பாக பரிசோதனை மேற்கொள்ளப்பட்டமைக்கான சான்றுகள் சமர்ப்பிக்கப்படவில்லை. | சுற்றறிக்கையின் ஆலோசனையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2019 ஆம் ஆண்டின் போது எரிபொருள் பரிசோதனை மேற்கொள்ளப்பட்ட போதிலும், முறையான குழுவொன்றின் மேற்பார்வையின் கீழ் அது மேற்கொள்ளப்படாமையினால் 2020 ஆம் ஆண்டிற்காக குழுவொன்று நியமிக்கப்பட்டு பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுகின்றது. |

**2. நிதி மீளாய்வு**

**2.1 செலவின முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் போது அமைச்சினால் 13 மீண்டெழும் செலவின விடயங்கள் மற்றும் 14 மூலதன செலவின விடயங்கள் என்பவற்றுக்குத் தேவையான மொத்த நிதி ஏற்பாடாக ரூபா 1,930,944,346 தொகை ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதி வரையில் மொத்த நிதி ஏற்பாட்டில் ரூபா 955,929,333 தொகை அதாவது 13 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையிலான வீச்சுக்குரிய நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. | ஆண்டின் தேவையினை சரியான பிரகாரம் எதிர்வுகூறி நிதியத்தை உச்ச அளவில் பயன்படுத்தல் வேண்டும். | பாதீட்டு சுற்றறிக்கை இலக்கம் 07/2019 மற்றும் 04/2019 இன் பிரகாரம் செலவினங்களை முகாமைத்துவம் செய்வதற்கு ஏற்பட்டமை மற்றும் கட்டுநிதி போதியளவாக கிடைக்காமையினால் நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. |

## 2.2 அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பண இணக்கக் கூற்று

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| சேவையை விட்டுச் சென்ற ஊழியரிடம் இருந்தும், ஓய்வு பெற்றுச் சென்ற ஊழியரிடம் இருந்தும் அறவிட வேண்டிய ரூபா 199,210 தொகையான கடன் மீதி 02 வருடங்களுக்கும் 06 வருடங்களுக்கும் இடையிலான காலம் முதல் கொண்டுவரப்படுவதுடன், அந்த கடன் மீதி இது வரை அறவிடப்பட்டிருக்கவில்லை. | கடன் பணத்தை அறவிடுவதற்கு விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஓய்வு பெற்றுச் சென்ற ஊழியருக்கு செலுத்துவதற்கு நிர்ணயிக்கப்பட்ட பணிக்கொடை பணத்தில் இந்த கடன் தொகையை கழிப்பதற்கு அறிவிக்கப்பட்டுள்ளதுடன், மற்றைய ஊழியரிடம் இருந்தான கடன் பணம் 2021 ஆம் ஆண்டின் போது அறவிடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. |

## 2.3 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளுக்கு உடன்படல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| (அ) இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப் பிரமாணம் 94(1) இன் பிரகாரம் எந்தவொரு காரணத்தின் அடிப்படையிலும் நிதி ஏற்பாட்டை விஞ்சி பொறுப்புக்களுக்காக உடன்பட முடியாதிருந்த போதிலும், அதற்கு முரணாக அமைச்சினால் மீளாய்வாண்டின் போது 05 செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்ட நிதி ஏற்பாட்டின் சேமிப்பான ரூபா 226,339 தொகையை விஞ்சி ரூபா 814,434 தொகையான பொறுப்புக்கள் ஏற்படுத்தப்பட்டிருந்தன. | நிதிப் பிரமாணம் 94(1) இன் பிரகாரம் நிதி ஏற்பாட்டு எல்லையில் செலவினங்கள் அல்லது கடப்பாடுகள் ஏற்படுத்தப்படுதல் வேண்டும். | இந்த பொறுப்புக்கள் அத்தியவசிய செலவினங்களுக்காக செய்யப்பட்ட செலவினங்களாகும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2019 திசெம்பர் 03 ஆம் திகதிய 271/2019 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் 3.4 ஆம் பந்தியின் பிரகாரம் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள். திறைசேரியினால் விநியோகிக்கப்பட்ட கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றுக்களுடன் ஒப்பீடு செய்யவேண்டிய போதிலும், அமைச்சுக்குரிய கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்களாக நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் ரூபா 62,715,395 தொகை மற்றும் திறைசேரி பதிவேட்டின் பிரகாரம் ரூபா 271,620,205 ஆக இருந்தமையால் ரூபா 208,904,810 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இந்த பொறுப்புக்கள் மாவட்ட செயலகத்தின் மூலம் நேரடியாக கட்டுநிதி தேவையில் காண்பிக்கப்பட்டு பொதுத் திறைசேரிக்கு அனுப்பியதன் காரணமாக அந்த பொறுப்புக்களை உறுதிப்படுத்துவதற்கு போதியளவான காலம் காணப்படாமை இதற்கான காரணமாகும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

---

## 3.1 முகாமைத்துவ நலிவுகள்

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | பிக்குமார்களுக்காக சுகாதார பாதுகாப்பு வேலைத் திட்டம் ஒன்றாக ''புதுபுத் சுரக்சா'' என்ற பெயரில் சுகாராத உதவி நிகழ்ச்சித் திட்டமொன்று மீளாய்வாண்டின் போது ஆரம்பிக்கப்பட்டதுடன், அதன் கீழ் 8,515 பிக்குகள் பதிவு செய்யப்பட்டிருந்தனர். மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் 09 மாகாணங்களை மேவுகை செய்யும் வகையில் இந்த நிகழ்ச்சித் திட்டம் தொடர்பான விழாவினை | நிதியத்தை சரியான பிரகாரம் முகாமைத்துவம் செய்து செலுத்தும் நடவடிக்கைகள் விரைவாக மேற்கொள்ளப்பட வேண்டும். | 2020 ஒக்தோபர் 01 ஆம் திகதி முதல் சரியான பொறிமுறையின் பிரகாரம் இந்த நிகழ்ச்சித் திட்டத்திலிருந்து செலுத்தும் நடவடிக்கைகள் அமுல்படுத்தப்பட்டிருந்ததுடன், இது வரையில் நிதிஉதவி செலுத்தும் நடவடிக்கைகள் சரியாக மேற்கொள்ளப்படுகின்றது. |

| | | |
|---|---|---|
| நடாத்துவதற்காக ரூபா 22.3 மில்லியன் செலவிடப்பட்டிருந்த போதிலும், 2020 திசெம்பர் கணக்காய்வு திகதி வரையிலும் உதவியினை வழங்குவதற்காக சிபாரிசு செய்யப்பட்ட 30 பிக்குமார்களின் பெயர்களில் 5 பேர்களுக்காக மாத்திரம் ரூபா 376,108 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | | |
| (ஆ) பிலியந்தலை பிரதேசத்தில் அமைந்துள்ள அமைச்சிற்கு சொந்தமான காணியொன்று தனியார் நிறுவனமொன்றினால் நிதியை ஈடுபடுத்தி மரங்களை ஒன்றுசேர்த்து மீள்வடிவமைக்கும் செயற் திட்டம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டு 2017 மார்ச் 30 ஆம் திகதி இருதரப்பினரினாலும் புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. | | |
| (i) உரிய செயற்திட்டம் வெற்றியளிக்காமையின் காரணமாக இந்த காணி மீருகக்காட்சி திணைக்களத்திற்கு கையளிப்பதற்கு 2020 நவம்பர் 03 ஆம் திகதி அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்திருந்தது. 2017 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதி வரை அமைச்சினால் பாதுகாப்பு மற்றும் ஏனைய செலவினமாக ரூபா 11,784,405 தொகையும், கணக்காய்விற்கு பெறக் கூடியதாக இருந்த தகவல்களின் பிரகாரம் தனியார் நிறுவனத்தினால் ரூபா 51,815,514 தொகையும் செலவிடப்பட்டிருந்தமையினால் அந்த செலவினங்கள் பயனற்ற செலவினமாக இருந்தமை அவதானிக்கப்பட்டது. | செயற்திட்டத்தை ஆரம்பிக்கும் போது மற்றும் நடாத்திச் செல்லும் போது சரியான திட்டமொன்றுடன் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | இந்த காணியின் பரப்பளவை கவனத்தில் கொண்டு பாதுகாப்பு சேவையினை வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. 2017 ஆம் ஆண்டில் கையொப்பமிடப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையின் பிரகாரம் அதன் மிகுதி நடவடிக்கைகளை முறையாக மேற்கொள்ளுவதில் தாமத வழுக்கள் காணப்பட்டது. அமைச்சரவை அங்கீகாரத்தின் பிரகாரம் காணியை கையளிக்கும் நடவடிக்கைகள் அரசாங்கத்திற்கு பாதகமின்றி மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |

| | | | |
|---|---|---|---|
| (ii) | இரு தரப்பினருக்கும் இடையே ஏற்படுத்தப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையின் 10 ஆவது பிரிவின் பிரகாரம் நிதியத்தை சேகரித்தல் மற்றும் செலவிடுவதற்காக அரசாங்க வங்கியொன்றில் கணக்கொன்று திறக்கப்பட்டு கையொப்பமிடலாளராக புத்தசாசன அமைச்சின் செயலாளர் அல்லது அவரினால் அதிகாரம் கையளிக்கப்பட்ட முகவர் ஒருவராக இருக்க வேண்டிய போதிலும், அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிக்கவில்லை. மேலும், கையளித்தல் உறுதியின் 7A(iii) இன் பிரகாரம் தனியார் நிறுவனத்தினால் சேகரிக்கப்படுகின்ற நிதியம் மற்றும் அந்த நிதியத்தை பயன்படுத்தல் தொடர்பான கணக்குகளை பேணிச் செல்ல வேண்டியிருந்தமையும், 7A(v) இன் பிரகாரம் மாதாந்த செயற்திட்ட அறிக்கை மற்றும் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், அதன் பிரகாரமும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே தனியார் நிறுவனத்தினால் சேகரிக்கப்பட்ட நிதி தொடர்பாகவும் அவற்றை பயன்படுத்துதல் தொடர்பாகவும் அமைச்சினால் முறையான பரிசோதனையொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | செயற்திட்டத்தை ஆரம்பிக்கும் போதும் நடாத்திச் செல்லும் போதும் சரியான திட்டமொன்றுடன் நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்தமை மற்றும் உடன்படிக்கை செய்யப்பட்ட விடயங்களின் பிரகாரம் மேற்கொள்ளப்படுகின்றதா என்பது தொடர்பாக நிரந்தரமாக பின்தொடர் நடவடிக்கைகள் செய்யப்பட வேண்டும். | 2017 ஆம் ஆண்டின் புரிந்துணர்வு உடன்படிக்கை மற்றும் கையளித்தல் உரித்துறுதி கையொப்பமிடப்பட்ட போதிலும், அந்த உடன்படிக்கை மற்றும் உரித்துறுதியின் பிரகாரம் மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் முறையாக மேற்கொள்ளப்படாதிருந்தமை காணப்படுகின்ற தகவல்களின் பிரகாரம் அவதானிக்கப்பட்டது. |
| (iii) | இந்த நிலத்தில் அமைந்துள்ள புத்தர் சிலையை சுற்றி நிர்மாணிக்கப்பட்ட தங்க வேலி அந்த பிரதேசத்தின் விகாரையொன்றுக்கு வழங்குவதற்கு அமைச்சின் செயலாளரினால் 2019 நவம்பர் 11 ஆம் திகதி அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த போதிலும், களப் பரிசோதனை மேற்கொள்ளப்பட 2020 செம்தெம்பர் 23 ஆம் திகதி வரையிலும் அந்த தங்க முலாம் | தங்க வேலி தொடர்பாக அமைச்சினால் வழங்கப்பட்டுள்ள அங்கீகாரத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | விகாரைக்கு தங்க வேலியை வழங்குவதற்கு அமைச்சின் இணக்கப்பாடு பெறப்பட்டுள்ளது. அது அமுல்படுத்தாதிருந்தமை அவதானிக்கப்பட்டதுடன், அதனை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| | தூண்கள் ஊழியர் அறையொன்றில் பாதுகாப்பற்ற வகையில் வைக்கப்பட்டிருந்தது. | | |
| (iv) | COVID - 19 வைரஸுக்கு எதிராக எதிர்ப்பு சக்தியினை அதிகரிக்கும் மருந்தொன்றை உற்பத்தி செய்வதற்கு மூலப் பொருட்களின் முன்தயாரிப்பு நடவடிக்கைகளுக்காக இந்த சூழலை பயன்படுத்துவதற்காக பிலியந்தலை பிரதேச செயலாளரினால் 2020 யூன் 18 ஆம் திகதி அமைச்சிலிருந்து அனுமதி கோரப்பட்டிருந்த போதிலும், சமயம் சார்ந்த நடவடிக்கைகள் இல்லாதிருந்தமையினால் அதற்காக அனுமதி வழங்கப்பட்டிருக்கவில்லை. எனினும், நிரந்தரமாக பொருத்தப்பட்ட இயந்திர பொறிமுறைகள் சிலவற்றைப் பயன்படுத்தி கடலை துண்டுகள் மற்றும் கருவாட்டு முட்களை அகற்றும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தமை 2020 செப்தெம்பர் மேற்கொள்ளப்பட்ட களப்பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது. | அனுமதியற்ற நிர்மாணங்களை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | அனுமதியற்ற வகையில் இவ்வாறான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டமை தகவல்களில் அறிக்கையிடப்பட்டிருக்கவில்லை. |